| **UG-127** | **BTM–32** |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2018.

Third Year

இலக்கணம் 3

யாப்பருங்கலக்காரிகை தண்டியலங்காரம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. எழுத்து தனியாகவோ, பல சேர்ந்தோ ஓசைப்பட அசைந்து நிற்பதன் பெயர் என்ன?

2. சீர் எத்தனை வகைப்படும்?

3. தரவு கலிப்பாவின் மற்றொரு பெயர் யாது?

4. செப்பலோசை எப்பாவிற்கு உரியது?

5. கலிப்பாவின் கடைசி உறுப்பு எது?

6. அம்மையாவது யாது?

7. அடி எத்தனை வகைப்படும்?

8. ஒப்புமை புலப்படப் பாடுவது எவ்வணி.

9. குணந், தொழில், சாதியால் வருவது எது?

10. நுட்பவணியின் இருவகைகள் யாவை?

11. ‘குறிப்பினால் உண்மையை மறைத்து உரைப்பது’-எது?

12. எண்வகை மெய்ப்பாடுகளைப் பெற்றுவரும் அணி எது?

13. நிதரிசனவணியின் வகைகள் யாவை?

14. பல அணிகள் ஒரே பாடலில் உரைப்பது ————————.

15. பாவிகம் என்பது ——————————.

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்
ஒரு தொடரில் விடை தருக.

16. கைக்கிளை மருட்பா என்பது யாது?

17. ‘கூன்’ என்பது யாது?

18. உவமை அணி விளக்குக.

19. ‘கூடாவியற்கை’ குறித்து எழுதுக.

20. குறிப்பு நுட்பம் என்பது யாது?

21. அவநுதியணியின் வகைகள் யாவை?

22. ‘புணர்நிலை அணி’ - விளக்குக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு
ஒரு பக்க அளவில் விடை தருக.

23. இணைக்குறளாசிரியப்பா குறித்து எழுதுக.

24. வெண்பாவின் வகைகள் யாவை?

25. சொல் வழு குறித்து எழுதுக.

26. ‘உதாரம்’ பற்றிய கருத்துக்களைச் சுட்டுக.

27. தன்மையணி குறித்து எழுதுக.

28. கருத்தா காரகவேது, பொருட்காரகவேது விளக்குக.

29. பாவிக அணி குறித்து எழுதுக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

30. தொடையின் வகைகள் குறித்து எடுத்துரைக்க.

31. பாவின் ஓசைகள் குறித்து விளக்கி வரைக.

32. தளை வகைகளை விளக்கியுரைக்க.

33. உவமையணியின் பாகுபாடுகள் குறித்து விளக்குக.

34. வாழ்த்தணி, சங்கீரணவணியின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்க.

| UG–128 | BTM–33 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION — DECEMBER, 2018.

Third Year

Tamil

தமிழ்மொழி வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஒரு தொடரில் விடை தருக.

1. ‘மொழிகளின் அருங்காட்சியகம்’ எனப் போற்றப்படும் நாடு எது?

2. அடிப்படை உயிரொலிகள் மூன்று எவை?

3. தமிழ் என்ற சொல்லுக்கு நேரான வடசொல் என்ன?

4. திராவிட மொழிகளுக்கு ஆரிய மொழிகளோடு நெருங்கிய தொடர்பு உண்டு என்று கூறிய அறிஞர் யார்?

5. விலங்கிடமிருந்து மனிதனை பிரித்து உயர்த்தியது எது?

6. போலி மொழி என்பது என்ன?

7. குறுமொழி – சான்று தருக.

8. இடைநா அண்ணத்தில் பிறக்கும் எழுத்து எது?

9. பாரதி குறிப்புத் தருக.

10. பாரதிதாசன் எழுதிய இரண்டு நாடகங்களைக் கூறுக.

11. காரைக்காலம்மையார் குறிப்பு எழுதுக.

12. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?

13. மணநூல் எனப்படும் காப்பியம் எது?

14. சுரதா படைப்புகள் இரண்டினைத் தருக.

15. மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய நூல் எது?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. போலச் செய்தல் என்றால் என்ன?

17. இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரபூர்வமான மொழிகள் எத்தனை?

18. மருதத் திணைக்கான கருப்பொருள்கள் எவை?

19. சிறுபாண் ஆற்றுப்படை – குறிப்பு எழுதுக.

20. கலம்பகம் என்றால் என்ன?

21. பக்திப் பாடல்களின் நோக்கம் என்ன?

22. தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இருவர் பெயரைக் குறிப்பிடுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. சோழர்காலத் தமிழ் விளக்கி வரைக.

24. குறுமொழி – விளக்குக.

25. முத்தொள்ளாயிரம் வழி அறியப்படும் சோழனின் போர்த் திறத்தை விவரி.

26. ஐம்பெரும் காப்பியங்கள் எவையெவை? குறிப்பு வரைக.

27. பாரதிதாசன் தமிழுக்குத் தொண்டாற்றிய திறம் குறித்து விவரி.

28. மரபுக்கவிதை – பொருள் விளக்கம் தருக.

29. பத்துப்பாட்டில் நெடுநல்வாடை பெறும் இடத்தையும் சிறப்பையும் விளக்குக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. தற்காலத் தமிழ் குறித்து விளக்கி எழுதுக.

31. தமிழில் பிறமொழிக் கலப்புக் குறித்து விவரிக்க.

32. பத்துப்பாட்டு நூல்களைப் பட்டியலிட்டு விவரி.

33. இரட்டைக் காப்பியங்களின் அமைப்பும் சிறப்பும் குறித்து எழுதுக.

34. உரையாசிரியர்களின் பங்கு, பணிகள் குறித்துக் கட்டுரை வரைக.

| UG–129 | BTM–34 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER 2018

## Third Year

## Tamil

### இலக்கியத் திறனாய்வும் படைப்பிலக்கியமும்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. ‘இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடு’ – நூல் எழுதிய அறிஞர் பெயர் என்ன?

2. படைப்புக் கலையும் திறனாய்வுக் கலையும் ஒன்றா – ஏன்?

3. இலக்கிய உணர்ச்சி என்றால் என்ன?

4. காப்பியத்தில் வாழ்த்து (அல்லது) வணக்கம் – எங்கு வரும்?

5. ‘கமலாம்பாள் சரிதம்’ என்னும் புதினத்தின் ஆசிரியர் யார்?

6. மு.வ. படைத்த நாவல் ஒன்றினைக் குறிப்பிடுக.

7. மரபுக் கவிதை என்றால் என்ன?

8. திறனாய்வின் இரு வகைகள் எவையெவை?

9. 'Appreciative Criticism' – தமிழில் எவ்வாறு வழங்கப்படுகிறது?

10. இலக்கியம் தோன்றும் நிலைக்களன் – எது?

11. கலையின் நோக்கம் என்ன?

12. கவின் கலைகள் என்பனவற்றிற்கு உதாரணம் தருக.

13. நாடகத்தில் சிறப்பிடம் வகிப்பது எது?

14. நாடகக் கலைகளை வளர்த்தவர்களைத் தமிழில் எவ்வாறு அழைப்பர்?

15. பரிதிமாற் கலைஞர் படைத்த நாடக நூல் ஒன்று கூறுக.

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. இலக்கியத்தின் கூறுகளாக அமைபவை எவையெவை?

17. வரலாற்று நாடகங்கள் இரண்டு கூறுக.

18. அங்கத நாடகம் என்றால் என்ன? சான்று தருக.

19. திறனாய் வாளர்க்கு உரிய இரு பண்புகளைக் கூறுக.

20. முடிவு முறைத் திறனாய்வு – விளக்கம் தருக.

21. இலக்கியத்திற்கும் இசைக்கும் உள்ள உறவினை கூறுக.

22. 'அடியார்க்கு நல்லார்' – உரையில் வெளிப்படும் கூத்து வகைகள் எவை?

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. தொல்காப்பியர் 'இலக்கியம்' – என்பது பற்றிக் கூறும் கருத்தினை எழுதுக.

24. இலக்கியத் திறனாய்வு குறித்த மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துக்களைக் கூறி விளக்குக.

25. 'கலை – கலைக்காகவே' – என்னும் கூற்றை விளக்குக.

26. பாராட்டு முறைத் திறனாய்வு – விளக்குக.

27. வாழ்க்கை வரலாற்றிலக்கியம் எழுதுவதன் நோக்கம் குறித்து எழுதுக.

28. 'கவிதை படைத்தல்' – விளக்கம் தருக.

29. நாடகம் எழுதுவதற்குரிய அடிப்படை விதிகள் எவையெவை?

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. ‘இலக்கிய உத்திகள்’ – குறித்து விவரித்து எழுதுக.

31. புனைகதை வகைகளை எடுத்துரைக்க.

32. திறனாய்வின் வளர்ச்சி வரலாறு குறித்து விரிவாக ஆராய்க.

33. “இலக்கியமும் சமுதாயச் சூழ்நிலையும்” என்பது குறித்து விரிவாகப் படைப்பிலக்கிய வழி நின்று ஆய்க.

34. ‘திரைக்கதை எழுதுதல்’ – என்பதன் அடிப்படை நெறிமுறைகளை விளக்கிக் கட்டுரைக்க.

———————

| UG–135 | FTM-03 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2018

Third Year

Functional Tamil

ஆட்சித் தமிழ்

Time : 3 hours                Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடை தருக.

1. ஆட்சித்தமிழ் என்றால் என்ன?

2. ஆட்சி மொழிச் சட்டவடிவம் சென்னை மாகாண சட்டமன்றத்தில் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

3. ஆட்சி மொழித் திட்டங்கள் அமைந்துள்ள இருநிலைகள் யாவை?

4. 1957இல் தொடங்கப்பட்டு, பிற்காலத்தில் தமிழ் வளர்ச்சித்துறையாக வளர்ந்த அமைப்பின் பெயரென்ன?

5. எழுத்துச் சீர்திருத்தத்தை எந்த ஆண்டில் தமிழக அரசு ஏற்றுக்கொண்டது?

6. ஆட்சிச் சொல்லகராதி எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?

7. மொழிபெயர்ப்பு வகைகள் யாவை?

8. ஆட்சிச் மொழிச் செயலாக்கத்தை ஆய்வுக்குட்படுத்தும் அலுவலர்கள் யாவர்?

9. சட்டத் தமிழ் – விளக்கம் தருக.

10. சட்ட மூதுரைகள் எந்த மொழியில் அமைந்துள்ள?

11. மொழிவாரி மாநிலங்கள் எப்போது உருவாயின?

12. உயர்நீதி மன்றப் பயன்பாட்டில் ஆளப்படும் இருவகை மொழிகள் யாவை?

13. ஆட்சி மொழிச் சட்டத்தில் காணப்படாத கூறு எது?

14. குறிப்பாணைகள் என்றால் என்ன?

15. கணினி – விளக்கம் தருக.

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தியில்</u> விடை தருக.

16. அரசின் உறுப்புகள் யாவை?

17. அரசு அலுவலர்களுக்கு ஆட்சிமொழி பற்றிய பயிற்சியளித்த அறிஞர்கள் குறித்து எழுதுக.

18. ஆட்சிமொழிச் சட்டத்தின் நோக்கம் என்ன?

19. தமிழகச் சட்டமன்றத் தோற்றத், வளர்ச்சி குறித்து எழுதுக.

20. தமிழகத்தின் இருவகை நீதிமன்ற அமைப்பு முறைகள் யாவை?

21. அரசு அலுவலகங்களில் அனுப்பப்படும் கடித வகைகளைக் குறிப்பிடுக.

22. மின்னணு அளுகைக் குழு என்றால் என்ன?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பக்க அளவில்</u> விடை தருக.

23. அரசு என்பதை வரையறை செய்க.

24. இக்கால ஆட்சித்தமிழ் சங்ககால ஆட்சித்தமிழ் இடம்பெறும் விதத்தை விளக்குக.

25. ஆட்சிமொழித் திட்டத்தில் அகராதிகளின் பங்கினைச் சுட்டிக்காட்டுக.

26. ஆட்சிமொழிச் செயலாக்கப் படிநிலைகள் பற்றி தொகுத்துக் கூறுக.

27. தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநரின் ஆட்சி மொழித்திட்ட ஆய்வுப் பணி யாது?

28. கலைச் சொல்லாக்கத்தில் ‘புதுப்புனைவு’ என்பது என்ன?

29. ஆட்சித்தமிழை நடைமுறைப் படுத்துவதில் ஏற்படுகிற சிக்கல்களுக்கான காரணங்களை வெளிப்படுத்துக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. சங்ககால ஆட்சிமுறையை விளக்குக.

31. ஆட்சிமொழிச் சட்டமும் அரசாணைகளும் எனும் பொருளில் கட்டுரை வரைக.

32. மொழிபெயர்ப்பும் தமிழ் இலக்கியமும் பற்றி ஆய்வுரை தருக.

33. சட்டமும் அறமும் என்ற தலைப்பில் உமது கருத்துக்களைப் பதிவிடுக.

34. அரசுக் கடிதங்களில் காணப்படும் பிழைகளை வகைப்படுத்தி, அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளை கூறுக.

———————

| UG–136 | FTM–02 |
|---|---|

# B.A. (Functional Tamil) DEGREE EXAMINATION – DECEMBER, 2018.

## Third Year

### மொழிபெயர்ப்புக் கலை

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.

1. ஆங்கிலக் கவிஞரும் மொழிபெயர்ப்பாளருமான ஜான்திரைடன் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்?

2. மொழிபெயர்ப்புக் கொள்கைகளை வகுத்தவர்களில் இருவர் பெயரைச் சுட்டுக.

3. Joint Effort – தமிழில் மொழிபெயர்ப்பு செய்க.

4. ஒலிபெயர்ப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

5. மொழிபெயர்ப்பின் நோக்கத்தையும் முறையையும் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

6. Inter lingual approach என்பதற்கான தமிழ் வடிவத்தைக் குறிப்பிடுக.

7. சொற்பொழிவு மொழிபெயர்ப்பின் வகைகள் இரண்டினைச் சுட்டுக.

8. இரட்சண்ய யாத்திரிகம் என்ற நூலை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தவர் யார்?

9. கவிதை மொழிபெயர்ப்பை 'மாயை' என்று கூறியவர் யார்?

10. பயனிலை (predicate) என்றால் என்ன?

11. Surface structure என்பதற்கு நிகரான தமிழ்க் கலைச் சொல் தருக.

12. சிறப்புச் சொல் நிகரிக்கு எடுத்துக்காட்டு தருக.

13. நிலைமொழி, இலக்குமொழி – விளக்குக.

14. "மொழிபெயர்ப்பு என்பது பொன்னைச் செம்பாக்கும் ஓர் அரிய இரசவாதக் கலை" என்று கூறியவர் யார்?

15. வானொலி, பண்பாடு ஆகிய சொற்களைத் தமிழ்ப்படுத்தியவர் யார்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு சில தொடர்களில் விடை தருக.

16. மொழிபெயர்ப்பு என்ற சொல்லுக்குப் பொருள் வரையறை செய்க.

17. ஆங்கிலத் தாக்கத்தால் உருவான புதிய வினைச்சொற்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

18. ஆட்சித் தமிழ் என்றால் என்ன?

19. கலைச் சொல்லாக்கம் என்றால் என்ன?

20. சட்ட மொழி பெயர்ப்பு வகைகள் யாவை?

21. மொழிபெயர்ப்பு வகைகளைச் சுட்டுக.

22. கலைச் சொல்லாக்க நெறிமுறைகளை வகுத்த தமிழறிஞர் இருவர் பெயரைத் தருக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. நியூமார்க்கின் மொழிபெயர்ப்புக் கொள்கைகள் யாவை?

24. மொழி பெயர்ப்பாளருக்கான இன்றியமையாத் தகுதிகளைக் குறிப்பிடுக.

25. பெயர்களை மொழிபெயர்க்கையில் எழும் சிக்கல்கள் என்னென்ன?

26. சாராம்ச மொழிபெயர்ப்புக்கு எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

27. தழுவல் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளும் போது கவனிக்கத்தக்கன யாவை?

28. ‘திரைமொழி’ வளர்ச்சியில் மொழிபெயர்ப்பின் பங்கு யாது?

29. கணினி மொழிபெயர்ப்பின் அடிப்படைகளைத் தெளிவுபடுத்துக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. கருத்தமைவு நிகரிகளின் சிக்கல்கள் குறித்து விளக்குக.

31. ஒரு மொழியின் மரபுப்படி மொழிபெயர்ப்பைச் செய்வது எவ்வாறு?

32. தமிழில் நிகழ்ந்துள்ள இலக்கிய மொழிபெயர்ப்பு வகைகளை விவரித்துக் கூறுக.

33. கலைச்சொல் உருவாக்கத்தின் போது பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் யாவை?

34. வாக்கியங்களைத் தனித்தனியாகப் பிரித்து மொழிபெயர்ப்பது சிக்கலைத் தீர்க்க உதவும் என்பதைச் சான்றுகளுடன் நிறுவுக.